# திட்ட சுருக்கம்

**1. அறிமுகம்:**

மீனாட்சி இரும்பு உருக்கு ஆலையானது S.No. 478/1, 478/2, 478/3, 478/4A, 479/1, 479/2A, 480/1, & 480/2 வரப்பட்டி கிராமம், சூலூர் தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது. இந்த நிறுவனம், ஒரு வருடத்திற்கு 1,45,000 டன்கள் இரும்பு துண்டுகள் (இடைநிலை தயாரிப்பு) மற்றும் 1,40,000 டன்கள் TMT உருளை கம்பிகள் (இறுதி தயாரிப்பு) உற்பத்தி செய்ய உத்யேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை நிறுவுவதற்காக 94979.72 ச.மீ. நிலத்தை கையகப்படுத்தி உள்ளது.

இந்த ஆலை, MoEF & CC யால் வழங்கப்பட்ட TOR விதிமுறைகளை பெற்றது. TOR. Letter No. SEIAA/TN/F.NO.7776(3a)/TOR- 833/2020, Dated: 02.02.2021.

முன்மொழியப்பட்ட திட்டத்தின் மொத்த செலவு ரூ 13 கோடிகள். ரூ 3 கோடி முதலீட்டில் சுற்றுசூழல் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு முன்மொழியப்பட்டது.

**2. ஆலையின் இருப்பிடம்:**

மீனாட்சி இரும்பு உருக்கு ஆலையானது S.No. 478/1, 478/2, 478/3, 478/4A, 479/1, 479/2A, 480/1, & 480/2 வரப்பட்டி கிராமம், சூலூர் தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாட்டில் அமைந்துள்ளது.

திட்ட தளம் அட்சரேகை 10$^o$54'9.8"N மற்றும் 10$^o$54'10.72"N & தீர்க்கரேகை 77$^o$12'12.54"E மற்றும் 77$^o$12'59.26"E யில் அமைந்துள்ளது.

தளத்திலிருந்து அருகிலுள்ள குடியிருப்பு கந்தம்பாளையம் கிராமம் 0.51 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அருகில் உள்ள ரயில் நிலையம் இருகூர் ரயில்வே சந்திப்பு ஆகும். அது தலத்தில் இருந்து NW திசையில் 19.5 கி.மீ. தொலைவில் உள்ளது. அருகில் உள்ள நீர்நிலைகள் செஞ்சேரிக்கரை 4.72 கி.மீ. (SW) மற்றும் வடவேடம்பட்டி கரை 4.53 கி.மீ. (SE) ஆகும். தளத்தில் இருந்து 10 கி.மீ. சுற்றளவில் எந்த பாதுகாக்கப்பட்ட காடுகளும் இல்லை.

தளத்தின் 10 கி.மீ. சுற்றளவில் மொத்தம் 77,418 மக்கள் தொகை கொண்ட 21 கிராமங்கள் மற்றும் சிறு நகரங்கள் உள்ளன. தளத்தின் 10 கி.மீ. சுற்றளவுக்குள் சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியமான மண்டலம், தேசிய பூங்காக்கள் மற்றும் வன விலங்கு சரணாலயங்கள் எதுவம் இல்லை.

**2.1. சாலை வசதிகள்**

இந்த தளத்திற்கு முக்கிய அணுகு சாலை பொள்ளாச்சி நெடுஞ்சாலை ஆகும். இது மேற்கில் 1.02 கி.மீ. தொலைவில் உள்ளது. பொள்ளாச்சி

நெடுஞ்சாலையை இணைக்கும் பணப்பட்டி சாலை தளத்திற்கு அருகில் உள்ளது.

### 3. திட்டத்திற்கான விளக்கம்

இரண்டாம் நிலை இரும்பு தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் வலுவாக உள்ளது. மாநிலத்தில் கிட்டத்தட்ட 50 நடுத்தர மற்றும் பெரிய அளவிலான இரும்பு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

மாநிலத்தில் தொழில்மயமாக ஆதரிக்கப்படும் கூற்றுகள் பின்வருமாறு:

- நல்ல உள்கட்டமைப்பு
- திறமையான தொழிலாளர்கள் கிடைத்தல்
- தொழில்மயமாக்குதலுக்கு அரசின் நேர்மறையான அணுகுமுறை.
- இரும்பு தொழில் பின்னணியில் உள்ள தொழில்முனைவூரின் இரும்பு.

மீனாட்சி குழுமம் கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த வாடிக்கையாளர் தளம் மற்றும் சந்தைகளுடன் முன்னணியில் உள்ளது. தற்போது TMT கம்பிகளின் தேவை அதிகமாக உள்ளது. ஆகையால் இந்த நிறுவனம் சந்தையின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் உடற்பத்தியை பெருக்க முடிவு செய்துள்ளது. எந்த திட்டம் வணிக ரீதியில் நியாயமானது.

### 4. திட்ட விளக்கம்

திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.0: திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

| அம்சம் | விவரங்கள் |
|---|---|
| **திட்டம்** | |
| முன்மொழியப்பட்ட உடற்பதி அளவு | MS Billets – 1,45,000 TPA<br>TMT கம்பிகள் – 1,40,000 TPA |
| நில தேவை | மொத்த நிலம் 9.495 ஹெக்டர் |
| திட்டத்தின் மதிப்பு | Rs. 13.0 கோடி |
| தேவையான மூலப்பொருட்கள் | Sponge Iron, MS Scrap, Pig Iron and Ferro Alloys |
| மொத்த நீர் தேவை | Proposed – 119.0 KLD (19.0 KLD Fresh water + 100.0 KLD Recycled Water)<br>Source of water is Local Panchayat |
| மின்சார தேவை | 9900 KW தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து பெறப்படும் |
| தொழிலாளர்களின் தேவை | 200 |

| | |
|---|---|
| மொத்த கழிவு நீர் உற்பத்தி | 9.0 KLD அன்றாட கழிவு நீரை சுத்திகரிக்கப்பட்டு தோட்டங்களுக்கு பயன்படுத்தப்படும். 100 KLD குளிர்வித்தல் மற்றும் தேத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட நீர் மறுசுழற்சி செய்யப்படுகிறது. |
| பசுமை பகுதி | 3.75 ஹெக்டர் |
| திடக்கழிவுகள் | ஊருக்காலை கசடு (8700 TPA), ஆலை கழிவுகள் (1318 TPA), தேவையற்ற இரும்பு குப்பைகள் (4156 TPA) ஆகியவைகள் மதிப்பிடப்பட்ட முக்கிய திடக்கழிவுகள் ஆகும்.<br><br>இந்த கழிவுகள் அனைத்தும் வணிக ரீதியான மறு பயன்பாட்டு மதிப்பை கொண்டுள்ளன. |

### 4.2 தயாரிப்பு விவரம்

**அட்டவணை 2.0 உற்பத்தி திறன்**

| S.NO | Product | Capacity TPD | Production TPA |
|---|---|---|---|
| 1 | MS Billets | 397.26 | 145000 |
| 2 | TMT Bars | 383.56 | 140000 |

### 5.0 சுற்றுசூழல் தாக்க மதிப்பீடு

இந்த ஆலை, MoEF & CC யால் வழங்கப்பட்ட TOR விதிமுறைகளை பெற்றது. TOR. Letter No. SEIAA/TN/F.NO.7776(3a)/TOR- 833/2020, Dated: 02.02.2021.

### 6.0. சுற்றுச்சூழலின் விளக்கம்.

### 6.1. ஆய்வு பகுதி

ஆலை எல்லையில் இருந்து 10 கி.மீ. சுற்றளவை உள்ளடக்கிய ஒரு பகுதி அடிப்படை சுற்றுச்சூழல் ஆய்வுக்காக எடுக்கப்பட்டட்து. ஆய்வுப்பகுதியை காட்டும் அடிப்படை வரைபடம் ES 01 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**Fig ES 01: ஆய்வு பகுதியின் அடிப்படை வரைபடம்.**




**6.2. ஆய்வு காலம்**

அடிப்படை சுற்றுச்சூழல் ஆய்வு மார்ச் 2021 - மே 2021 க்கு இடையில் மேற்கொள்ளப்பட்டது.

**6.2.1. நில சூழல்**

**1.** தற்போதய தளத்தின் நிலா பயன்பாடு திட்டமில்லா பகுதியில் அமைகிறது. மற்றும் ஆலையின் மொத்த நிலப்பரப்பு 4.495 ஹெக்டர்களுடன் முன்மொழியப்பட்டுள்ளது.

**2.** திட்டத்தின் குறிப்பிட்ட வானிலை தகவலின் படி காற்று வீசும் திசை தென்மேற்கு மற்றும் கிழக்கு திசையிருந்து வருகிறது.

**3.** திட்டத்தின் இடம் புவி நிலநடுக்க மண்டலம் III (மிதமான நில அதிர்வு மண்டலம்) கீழ் வருகிறது. மற்றும் அது வெள்ள மண்டலத்தின் கீழ் வரவில்லை.

திட்டத்தளம் மற்றும் எடையக பகுதியில் உள்ள அதிகபட்ச காற்றின் தரம் பின்வருமாறு:

- PM10 ranged between 29.7 µg/m3 75.4 µg/m3. NAAQ stipulated standard for PM10 for 24 hr. average is 100 µg/m3.
- PM 2.5 values varied from 24.0 µg/m3 to 39.0 µg/m3. NAAQ stipulated standard for PM2.5 for 24 hr. average is 60 µg/m3.
- SO2 varied from 9.6 µg/m3 18.3 µg/m3. NAAQ stipulated standard for SO2 for 24 hr. average is 80 µg/m3.
- NO2 ranged between 15.7 µg/m3 33.7 µg/m3. NAAQ stipulated standard for NO2 for 24 hr. average is 80 µg/m3.
- CO is below detection levels, NAAQ stipulated standard for CO for one hour is 4mg/ m3

4. பகலில் ஒலியின் அளவுகள் 44.2 dB(A) இலிருந்து 52.1 dB(A) வரம்பில் உள்ளது. மற்றும் இரவில் ஒலியின் அளவுகள் 38.2 dB(A) இலிருந்து 42.5 dB(A) வரம்பில் உள்ளது.

5. கடினத்தன்மை (இரண்டு மாதிரிகள்) மற்றும் மக்னிசியும் (ஒரு மாதிரி) தவிர நிலத்தடி நீரின் பெரும்பாலான அளவுறுகள் குடி நீரின் IS 10500 (2012) தரத்திற்குள் உள்ளன.

6. தளத்தின் 10 கி.மீ. சுற்றளவில் மிக குறைவான மேற்றப்பரப்பு நீர் ஆதாரங்கள் உள்ளன. ஆய்வு மேற்கொள்ளும் காலத்தில் இந்த நீர் நிலைகள் வறண்டு போனதால், மேற்பரப்பு நீர் மாதிரி செய்ய இயலவில்லை.

7. மண் வகைகள் மணல், களிமண், நடுநிலை லேசான கார தன்மை கொண்டவை.

8. திட்ட ஆய்வு பகுதியில் 10 கி மீ சுற்றளவில் இருந்து பதிவு செய்யப்பட்ட தாவர இனங்கள் எதுவும் அரிய/ ஆபத்தான/ அழிந்து வரும் இனங்கள் வகையை சேர்ந்தவை அல்ல. வன விலங்கு சரணாலயங்கள், ஒதுக்கப்பட்ட காடுகள், தேசிய பூங்காக்கள் எதுவும் திட்ட ஆய்வு பகுதிக்குள் இல்லை.

### 6.3. சமூக பொருளாதார நிலைமைகள்

திட்டத்தின் சமூக பொருளாதார தாக்க மதிப்பீடு 10 கி மீ சுற்றவுக்குள் 21 கிராமங்கள் 2 மாவட்டங்கள் மற்றும் 2 தாலுகாக்களை உள்ளடக்கி உள்ளது.

திட்ட ஆய்வு பகுதியின் மக்கள் தொகை 77418 ஆகும். இதில் ஆண்கள் 49.6% மற்றும் பெண்கள் 50.4% ஆகும். பாலின விகிதம் 1000 ஆண்களுக்கு 1002 பெண்கள் உள்ளன. ஆய்வு பகுதியில் மக்களின் சராசரி கல்வியறிவு 64.09% ஆகும்.

## 7.0. எதிர்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள்

**காற்றின் சூழல்:**

காற்றின் தரத்தின் தாக்கமானது 2x 12 MT உறுக்கு ஆலை, 2 DG (1x 250 KVA மற்றும் 1x 65 KVA) இருந்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ISC-AERMOD இல் இருந்து ISCST3 Algorithm மூலமாக காற்றின் தாக்கங்கள் அளவிடப்படுகின்றன.

இந்த ஆய்வின் முடிவுகள் சுற்றுப்புற காற்றின் தர அளவுருகுகளில் ஓரளவு அதிகரிப்பை குறிக்கின்றன. மற்றும் 24 மணிநேரம் கணிக்கப்பட்ட செறிவுகள் CPCB யின் பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளுக்குள் உள்ளன.

**அட்டவணை 3.0**

| AAQ Location | Base Line Concentration (µg/m³) * | | | Predicted GLCs (µg/m³) | | | Cumulative Concentration (µg/m³) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | PM10 | SO2 | NOx | PM10 | SO2 | NOx | PM10 | SO2 | NOx |
| திட்ட தளம் | 79.9 | 19.4 | 24.3 | 1.45 | 0.938 | 1.71 | 81.35 | 20.338 | 26.01 |
| வடவள்ளி | 75.5 | 16.4 | 20.9 | 0.677 | 0.547 | 1.340 | 76.177 | 16.947 | 22.24 |
| வி. வடுக்கம்பாளையம் | 69.9 | 17.2 | 21.6 | 0.272 | 0.221 | 0.977 | 70.172 | 17.421 | 22.577 |
| கே. கிருஷ்ணாபுரம் | 73.1 | 17.2 | 21.8 | 0.348 | 0.245 | 1.013 | 73.448 | 17.445 | 22.813 |
| புளியமரத்துப் பாளையம் | 67.9 | 18.0 | 22.3 | 0.158 | 0.104 | 0.296 | 68.058 | 18.104 | 22.596 |
| வடம்பன்சேரி | 70.0 | 16.2 | 22.1 | 0.034 | 0.064 | 0.282 | 70.034 | 16.264 | 22.382 |
| மேலகௌண்டம்பாளையம் | 72.3 | 17.0 | 22.9 | 0.154 | 0.110 | 0.250 | 72.454 | 17.110 | 23.15 |
| சுல்தான்பேட்டை | 72.7 | 17.1 | 21.8 | 0.336 | 0.276 | 0.699 | 73.036 | 17.376 | 22.499 |

* 98 Percentile values

**Note:** National Ambient air quality standards for PM 10 – 100 **µg/m³** PM 2.5 – 60 **µg/m³**, SOX – 80 **µg/m³** and NOX – 80 **µg/m³**

**நீர் ஆதாரங்களின் பாதிப்பு:**

ஆலைக்கான தினசரி நன்னீர் தேவை (119 KLD), உள்ளூர் பஞ்சாயத்தில் இருந்து எடுக்கப்படும். முதன்மை சுத்திகரிப்பு மூலம் ஆலை மற்றும் உலை குளிர்ச்சி நீரை மீண்டும் பயன்படுத்த முன்மொழியப்பட்டது. STP நிறுவ முன்மொழியப்பட்டது, இதில் சுத்திகரிக்கப்பட்ட நீர், ஆலை இடத்திலுள்ள தோட்டத்திற்கு பயன்படுத்தப்படும்.

இப்பகுதியில் உள்ள நிலத்தடி நீர் வளத்தை அதிகரிக்க ரூ 15 லட்சம் செலவில் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவப்படும்.

**இரைச்சலின் தாக்கங்கள்:**

உலை, ரோலிங் மில் மற்றும் DG செட் களிலிருந்து இரைச்சலின் தாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. DG செட்கள் ஒலி அறைகளுடன் தனி அறைகளில் வைக்கப்படும். இரைச்சல் உருவாக்கும் பகுதிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு PPE கள் வழங்கப்படும். ஆலையின் முன்பகுதியில் வளர்க்கப்படும் மரங்கள் தொழிற்சாலை வளாகத்திற்கு வெளியே இரைச்சலின் தாக்கத்தை குறைக்கும்.

**மண் பாதிப்புகள்:**

கசடுகள் மற்றும் ஆலை கழிவுகளிலிருந்து உருவாகும் திடக்கழிவுகள் முறையாக கைஆளப்படாவிட்டால் மண்ணை மாசுபடுத்தும். கழிவுகளை முறையாக கையாளுவதற்கு அகற்றுவதற்கும் போதுமான பாதுகாப்பு வழிமுறைகள் சுற்றுச்சூழ மேலாண்மை திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளன.

8700 TPA கசடுகள் சிமெண்ட், செங்கல் உற்பத்தியாளர்களுக்கு விற்கப்படும். 1318 TPA ஆலை கழிவுகள் பெயிண்ட் தொழிற்சாலைகளுக்கு விற்கப்படும். 4156 TPA இரும்பு கழிவுகள் இரண்டாம் நிலை ஆலைகளுக்கு மூலப்பொருட்களாக விற்கப்படும்.

**சூழலியல் மீதான தாக்கங்கள்:**

திட்ட ஆய்வு பகுதியில் அழிவு நிலையிலுள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் எதுவும் இல்லை. மேலும் ஆலை வளாகத்தில் 3.75 ஹெக்டர் பரப்பளவில் பசுமை பகுதியை உருவாக்க உத்தியேசிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுச்சூழலில் நேர்மறையான தாக்கம் இருக்கும்.

**சமூக பொருளாதார தாக்கம்:**

முன்மொழியப்பட்ட திட்ட ஆலை 200 நபர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகிறது மற்றும் மறைமுக வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது.

ஒரு கொள்கையாக ஆள்சேர்புக்கு உள்ளூர் இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுக்க இந்நிறுவனம் முன்மொழிந்தது. அருகில் உள்ள கிராமங்களில் ரூ 26 லட்சம் முதலீட்டில் சமூக உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தியேசிக்கப்பட்டுள்ளது.

## 8. சுற்றுசுழலால் கண்காணிப்பு தித்திட்டம்

காற்று, நீர், மண், இரைச்சல், மற்றும் நிலத்தடி நீர் நிலைகளை உள்ளடக்கிய ஒரு திட்டமிடப்பட்ட சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் திட்ட தளத்திலும் மற்றும் அருகில் உள்ள கிராமமான கண்டம்பாளையத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 9. கூடுதல் ஆய்வுகள்

### 9.1. இடம் பகுத்தாய்வு

ஊருக்கு ஆலை மற்றும் ரோலிங் மில் செயல்பாடுகளில் இருந்து அடையாளம் காணப்பட்ட அபாயங்களை கருத்தில் கொண்டு முன்மொழியப்பட்ட செயல்பாடுகளில் இருந்து விரிவான இடர் பகுத்தாய்வு (Risk Assessment) மேற்கொள்ளப்படுகிறது. அவசர நிலைகளை கையாள போதுமான உள்கட்டமைப்பு விரிவாக நடவடிக்கைகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 9.2. பேரிடர் மேலாண்மை

ஆலை மற்றும் செயல்பாடுகளுடன் தொடர்புடைய அபாயங்கள் அடிப்படையில் நன்கு வரையறுக்கப்பட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் வரையப்பட்டுள்ளது. ஆலை மேலாளாளரின் கட்டுப்பாட்டின் கீழ் அவசர நிலைகளை கையாள பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆலையினுள் ஏதேனும் அவசர நிலை ஏற்பட்டால் அரசு நிறுவனங்கள் மற்றும் மருத்துவ மனைகளுக்கு தொடர்பு நெறிமுறைகள் வரையறுக்கப்படுகின்றன.

### 9.3: போக்குவரத்து மேலாண்மை

அடிப்படை ஆய்வுகளின் ஒரு பகுதியான, பொள்ளாச்சி மாநில நெடுஞ்சாலையில் போக்குவரத்து நிலைமைகள் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஒரு வழி சாலையில் இரு திசைகளிலும் மொத்த போக்குவரத்து அளவு 2597.5 PCUs/Day. கட்டுமான கட்டத்தின் போது அதிகரிக்கும் போக்குவரத்து 30 PCUs/Day ஆகும். தற்போதுள்ள சாலை நெட்ஒர்க் மூலம் இந்த பெருகிவரும் போக்குவரத்தை பாதுகாப்பாக எடுத்துச்செல்ல முடியும்.

### 10.0 திட்ட நன்மைகள்

இந்த திட்டத்தின் காரணமாக 200 நபர்கள் நேரடி வேலைவாய்ப்பு பெறுவார்கள். ஆலையில் மூலப்பொருட்கள் சப்ளையர்கள், போக்குவரத்து மற்றும் பிற சேவை பகுதி காரணமாக மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

### 10.1 நிறுவன சுற்றுசூழல் பொறுப்பு (CER)

நிறுவன சுற்றுசூழல் பொறுப்பின் ஒரு பகுதியான மீனாட்சி குழுமம் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ 26 லட்சம் செலவிட முடிவு செய்துள்ளது. பொது விசாரணையின் பொது உள்ளீடுகளின் அடிப்படையில் ஒரு தற்காலிக திட்டம் தயாரிக்கப்பட்டு, கிராம மக்களின் முன்னுரிமைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, மாவட்ட அதிகாரிகளின் உதவியுடன் செயல்படுத்துதல் திட்டம் தயாரிக்கப்ப்டும்.

விரிவான CER செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. உள்ளூர் கிராமங்களின் உள்ளீடுகளின் அடிப்படையில் இந்த திட்டம் மாவட்ட அதிகாரிகள் மூலம் செயல்படுத்தப்படும்.

**அட்டவணை 4.0**

| செயல்பாடு | ஆண்டு வாரியான பட்ஜெட்கள் (Rs. Lakhs) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | Total |
| வரப்படி மற்றும் கண்டம்பாளையத்தில் உள்ள குடிநீர் வசதிகளை அதிகப்படுத்துதல் | 3.0 | 1.5 | 0.5 | 0.5 | 0.5 | 6.0 |
| அருகிலுள்ள கிராமங்களில் சுகாதார முகாம்கள் | 1.5 | 1.5 | 1.5 | 1.5 | 1.5 | 7.5 |
| அருகில் உள்ள வரப்பட்டு மற்றும் கண்டம்பாளையம் கிராமங்களில் உள்கட்டமைப்புக்கான ஆரம்ப பள்ளிக்கான பங்களிப்பு. | 1.0 | 1.0 | 1.0 | - | - | 3.0 |
| வரப்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான பங்களிப்பு. | 3.0 | 2.5 | - | - | - | 5.5 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அருகிலுள்ள கிராமங்களில் மழைநீர் சேகரிப்பு மற்றும் பசுமை திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் | 2.0 | 1.0 | 1.0 | -- | -- | 4.0 |
| **Total** | **10.5** | **7.5** | **4.0** | **2.0** | **2.0** | **26.0** |

### 11.0. சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் (EMP)

கட்டுமானத்தின் போது அடையாளம் காணப்பட்ட தாக்கத்தை நிவர்த்தி செய்ய சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் வரையப்பட்டுள்ளது. இது தற்காலிகமானது மற்றும் செயல்பாட்டு கட்டங்களில் அடையாளம் காணப்பட்ட தாக்கங்கள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் EMP இல் இணைக்கப்பட்டுள்ளன.

### EMP செயல்படுத்த பட்ஜெட்

சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த மொத்தம் 1.0 கோடி முன்மொழியப்பட்டுள்ளது.

கழிவு கையாளுதல், சுற்றுச்சூழல் கண்காணிப்பு, பசுமை பகுதி மேம்பாடு, புயல் நீர் மேலாண்மை போன்றவற்றை உள்ளடக்கிய EMP யில் செயல்படுத்துதல் செகாவிற்காக ஆண்டிற்கு ரூ 32.62 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 5.0: EMP பட்ஜெட்**

| வ.எண். | விளக்கம் | மூலதன செலவு | தொடர்ச்சியான செலவு |
|---|---|---|---|
| **1** | Air Pollution Control<br>For two induction furnaces with primary and secondary ductings | 35.0 | 15.0 |
| **2** | Water Pollution Control<br>Primary treatment plant of mill cooling water, Construction of STP | 15.0 | 4.0 |
| **3** | Storm Water management & Rain water harvesting structures | 15.0 | 1.0 |
| **4** | Solid Waste Management & dust prevention measures | 4.0 | 1.0 |
| **5** | Solar lighting in open areas | 1.5 | 1.0 |

| | | | |
|---|---|---|---|
| **5** | Noise Pollution Control | 2.0 | 1.0 |
| **6** | Environmental Monitoring & Management | - | 2.62 |
| **7** | Occupational health & Safety | 5.0 | 2.0 |
| **8** | Fire Safety | 15.0 | 2.0 |
| **9** | Green belt & open area development* | 7.5 | 3.0 |
| **Total** | | **100.0** | **32.62** |